# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்)

**குடியியல் மற்றும் வர்த்தக பிணக்குகளின் மத்தியஸ்திற்காகவும்; 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தினை நீக்குவதற்காகவும்; அவற்றோடு தொடர்புபட்ட அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
2025 யூலை மாதம் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

(2025 யூலை மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்யபட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[27 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 101.00 தபாற் செலவு: ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

ச.வ. - ஒ 8/2025

**குடியியல் மற்றும் வர்த்தக பிணக்குகளின் மத்தியஸ்திற்காகவும்; 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தினை நீக்குவதற்காகவும்; அவற்றோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மத்தியஸ்த (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சட்டத்தின் ஏற்புடைமை

**2.** (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கமைய, இச் சட்டத்தின் ஏற்பாடுகள் மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்றினைப் பின்பற்றினாலுஞ்சரி அல்லது அத்தகைய உடன்படிக்கையொன்று இல்லாதபோது பிணக்கிற்கான திறத்தவர் ஒருவரினால் மத்தியஸ்தத்திற்கு தன்னிச்சையாக ஆற்றுப்படுத்தப்பட்டாலுஞ்சரி அல்லது சட்ட நீதிமன்றம் ஒன்றினால் ஆற்றுப்படுத்தப்பட்டாலுஞ்சரி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மத்தியஸ்தத்தின் மூலம் (இதனகத்துப்பின்னர் "பிணக்குகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் அல்லது 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (பிணக்குகளின் விசேட வகுதிகள்) சட்டத்தின் நியதிகளின்படி மத்தியஸ்தத்தின் மூலம் பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (பிணக்குகளின் விசேட வகுதிகள்) சட்டத்தின் நியதிகளின்படி மத்தியஸ்தத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு தேவைப்படுகின்றதான பிணக்கு எதுவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மத்தியஸ்தத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலாகாது.

*மத்தியஸ்தம் செய்யப்பட முடியாத பிணக்குகள்*

**3.** இதற்கான அட்டவணையில் தரப்பட்ட ஏதேனும் பிணக்கு தொடர்பில் உள்ளடங்கலாக தீர்வை ஒன்று பற்றி அல்லது நீதிமன்றக் கட்டளை ஒன்று பற்றி மட்டும் பயன்கொடுக்கக்கூடியதான நியதிகளின் உள்ளடக்கத்தை எந்தப் பிணக்கு தொடர்பில் தீர்த்துவைத்தலைத் தேவைப் படுத்துகின்றதோ அந்த ஏதேனும் பிணக்குத் தொடர்பில் மத்தியஸ்தம் ஒன்று நடாத்தப்படுதல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிணக்குகளிற்கு இயைபான விடயங்கள் ஏற்புடையற்பாலதான சட்டத்துடன் இணங்குகையில் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை ஒன்றில் கூட்டிணைப்பு பற்றி கவனத்துட்கொள்வதற்காக நீதிமன்றத்திற்கு தீர்த்துவைத்தல் நியதிகளை சமர்ப்பிக்கின்ற நோக்கத்திற்காக மத்தியஸ்தம் செய்யப்படலாம்.

*மத்தியஸ்த உடன்படிக்கை*

**4.** (1) திறத்தவர்கள் ஒன்றில் ஒப்பந்தம் ஒன்றிலுள்ள வாசகம் அல்லது எழுத்திலான தனிவேறான உடன்படிக்கை ஒன்றில் இருக்கக்கூடியதான மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்றின்மூலம் மத்தியஸ்தத்தினால் தீர்த்துவைக்கப்படக்கூடியதான ஒப்பந்தவகையிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி வரையறுக்கப்பட்ட சட்ட உறவு தொடர்பில் ஏலவேயுள்ளதான அல்லது அவர்களுக்கிடையில் எழக்கூடியதான ஏதேனும் பிணக்கை மத்தியஸ்தத்தின் மூலமான தீர்த்து வைத்தலுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு உடன்படலாம்.

(2) மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்று, மத்தியஸ்த சேவை வழங்குநரின் பெயர், மத்தியஸ்தத்தை நடாத்துவதில் ஏற்புடையதாக வேண்டியதான விதிகள் மற்றும் எந்தக் காலப் பகுதியினுள் மத்தியஸ்தம் முடிவுசெய்யப்படவேண்டுமோ அந்தக் காலப்பகுதி உட்பட மத்தியஸ்தத்தை நடாத்துவது தொடர்பாக திறத்தவர்களினால் உடன்படுகின்றதான அத்தகைய நியதிகளை உள்ளடக்கலாம்.

*திறத்தவர்கள் மத்தியஸ்தத்திற்கு உடன்படுகின்ற விடத்து, மத்தியஸ்தத்தின் முடிவிற்கு முன்னர் தொடுக்கப்படாத அல்லது ஏற்றுக் கவனிக்கப்படாத வழக்கு நடவடிக்கைகள்*

**5.** (1) பிணக்கொன்றிற்கான திறத்தவர்கள் மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்றின் நியதிகளின்படி மத்தியஸ்தத்திற்கு உடன்பட்டுக்கொள்ளுமிடத்து அல்லது மத்தியஸ்த வழக்கு நடவடிக்கைகள் மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்று இல்லாமையான பட்சத்தில் இச்சட்டத்தின் நியதிகளின்படி தொடங்கவுள்ளவிடத்து, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பிணக்கு தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எதுவும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் வழக்கெழு காரணத்தை அமைத்துருவாக்கு

கின்ற அத்தகைய பிணக்கு தொடர்பில் தீர்த்துவைக்காமைக்கான சான்றிதழ் ஒன்றை காண்பித்திருந்தாலன்றி, நீதிமன்றம் ஒன்றினால் தொடுக்கப்படுதலோ அல்லது ஏற்றுக் கவனிக்கப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட பிணக்கொன்றிற்கான திறத்தவர் ஒருவர் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் V ஆம் பாகத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் நாடப்படும் ஏதேனும் தற்காலிக நிவாரணம் தொடர்பில் நிவாரணத்தை நாடுகின்றவிடத்து, அத்துடன் அத்தகைய ஏதேனும் விடயம் தொடர்பில் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கு அத்தகைய தற்காலிக நிவாரணத்தை வழங்குவது தொடர்பான அளவுவரை மட்டும் நீதிமன்றம் ஒன்றினால் ஏற்றுக் கவனிக்கப்படலாம் என்பதுடன் தீர்மானிக்கவும்படலாம்.

மத்தியஸ்தத்தின் போது காலவிதிப்பு ஏற்புடைய தாகாது

**6.** ஏதேனும் வழக்குக் காரணம் தொடர்பில் காலவிதிப்புக் காலப்பகுதியை கணக்கிடுவதில், விடயத்திற்கேற்ப, மத்தியஸ்தம் தொடங்கும் தேதியிலிருந்து தொடங்குகின்ற மற்றும் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் அல்லது தீர்த்து வைக்காமைச் சான்றிதழின் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கணக்கிடுவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

நீதிமன்றத்தின் மூலமான மத்தியஸ்தத் திற்கான ஆற்றுப்படுத்தல்

**7.** (1) எந்த நீதிமன்றம் ஒன்றில் ஏதேனும் பிணக்கு தொடர்பான வழக்கு கோப்பிடப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றம் அதனது தற்றுணிபின்பேரில், இயைபான எல்லா சூழ்நிலைகளையும் கவனத்துட்கொள்வதன்மேல் மத்தியஸ்தத்தின் மூலம் தீர்த்துவைப்பதற்கான பிணக்கை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆற்றுப்படுத்துவது தோதானதா என்பதை தீர்மானிக்கலாம் என்பதுடன் அவ்வாறு தீர்மானிக்கப்படின், திறத்தவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட மத்தியஸ்த சேவை வழங்குநர் ஒருவரினால் நிருவகிக்கப்பட்ட மத்தியஸ்தத்திற்கு பிணக்கை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆற்றுப்படுத்துகின்ற கட்டளையை ஆக்கலாம்.

(2) பிணக்கு எந்த மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆற்றுப்படுத்தப்படுகின்றதோ அந்த மத்தியஸ்த சேவை வழங்குநர் ஏற்புடையற்பாலதான விதிகளுக்கு இணங்கி மத்தியஸ்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றக் கட்டளை ஒன்றினை பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து

அறுபது (60) நாட்களினுள் மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(3) மத்தியஸ்தம் ஒன்றின்போது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் மத்தியஸ்தம் பூர்த்திசெய்யப்பட இயலாது என தோன்றுகின்றவிடத்து, மத்தியஸ்தர் மற்றும் திறத்தவர்கள் தீர்த்துவைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவெனவும் அபிப்பிராயப்படுகின்றவிடத்தும் அத்தகைய காலப்பகுதிக்கு அப்பால் மத்தியஸ்தத்தைத் தொடரவிரும்புகின்றவிடத்தும் மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு அதற்கிணங்க அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் மத்தியஸ்தத்தை பூர்த்திசெய்து கொள்வதற்கு குறித்துரைக்கப்படவேண்டிய மேலும் காலப்பகுதியை கோரி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன் மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தை முன்னெடுத்தலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் அளிக்கப் பட்ட மேலதிக காலப்பகுதியின் காலாவதியின்மேல், விடயத் திற்கேற்ப, திறத்தவர்கள் அல்லது மத்தியஸ்த சேவை வழங்குநர் ஏற்புடையதற்பாலதான உட்பிரிவு (5) அல்லது (6) உடன் இணங்கியொழுகுவதற்கு முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(5) நீதிமன்றத்தினால் அத்தகைய ஆற்றுப்படுத்துகை ஒன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்று மத்தியஸ்தத்தைப் பின்பற்றி செய்துகொள்ளப்படுகின்றதுடன் 23 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து தீர்த்துவைத்தல் உடன்படிக்கையானது திறத்தவர் களினால் நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் நியதிகள் தீர்வை ஒன்று 26 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் ஏதுவின்மீது பதியப்படுதலாகாது என தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் நிலைநாட்டியிருந்தாலொழிய, நீதிமன்றத்தின் தீர்வை ஒன்றாக பதிவுசெய்யப்படுதல் வேண்டும். அதேபட்சம் தீர்த்துவைத்தல் எதுவும் அடையப்படாதுவிடின், விடயத்தை கேட்பதற்கும் தீர்மானிப்பதற்கும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(6) நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட அத்தகைய ஆற்றுப் படுத்துகை ஒன்றின்மீது தீர்த்துவைத்தல் ஒன்று எட்டப் படாதவிடத்து, மத்தியஸ்த சேவை வழங்குநர் அதற்கிணங்க

நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் தீர்த்துவைத்தல் ஒன்று திறத்தவர் ஒருவர் இல்லாமை காரணமாக சாத்தியமாகாதிருப்பின், அத்தகைய திறத்தவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் விபரங்களை அத்தகைய திறத்தவர் இல்லாமைபற்றிய தேதிகளையும் வழங்கி அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடுதல் வேண்டும். அதன்பின்னர் நீதிமன்றமானது விடயத்தை கேட்பதற்கும் தீர்மானிப்பதற்கும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

மத்தியஸ்தம் ஒன்று எவ்வாறு தொடங்கி வைக்கப்பட முடியும்

**8.** (1) பிணக்கொன்றின் மத்தியஸ்தம் ஒன்று பின்வருவனவற்றுக்கு தொடங்கப்படுதல் வேண்டும் :-

(அ) மத்தியஸ்த உடன்படிக்கை இருக்கின்றவிடத்தும் மத்தியஸ்த சேவை வழங்குநர் அதன்கண் பெயரிடப்பட்டுள்ளவிடத்தும், பிணக்கிற்கான திறத்தவர்மூலம் அத்தகைய மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் ஒரு பிணக்கு எழுந்துள்ளது என்றும் மத்தியஸ்த வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்படவேண்டும் என்றும் கோரி அந்த அறிவிப்பின் பிரதியை பிணக்கிற்குரிய ஏனைய திறத்தவருக்கோ அல்லது திறத்தவர்களுக்கோ அனுப்புவதன்மூலமும்; அல்லது

(ஆ) மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்று இருக்கின்றவிடத்தும் மத்தியஸ்த சேவை வழங்குநர் அதன்கண் பெயரிடப்படாதவிடத்தும் திறத்தவர் ஒருவர் பிணக்கிற்கான ஏனைய திறத்தவருக்கோ அல்லது திறத்தவர்களுக்கோ பிணக்கானது மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப் படுத்தப்படும் என்னும் எழுத்திலான அறிவிப்பு ஒன்றை அனுப்புவதன் மூலமும் மற்றும் அத்தகைய அறிவிப்பின் பிரதி ஒன்றை எவ் மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு அனுப்பப்படவேண்டுமோ அம்மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு அனுப்புவதன்மூலமும்; அல்லது

(இ) மத்தியஸ்த உடன்படிக்கை எதுவும் இல்லாத விடத்து-

(i) பிணக்கிற்கான திறத்தவர்கள் உடன் படின், அதன்மேல் மத்தியஸ்தர் ஒருவரின் பெயர்குறித்த நியமனத்தை உள்ளடக்கியதான மத்தியஸ்தத்தை தொடங்குவதற்கான எழுத்திலான அறிவிப்பை கூட்டாக மத்தியஸ்த சேவை வழங்குநருக்கு அனுப்புவதன் மூலமும்; அல்லது

(ii) பிணக்கிற்கான ஏனைய திறத்தவருக்கோ அல்லது திறத்தவர்களுக்கோ அனுப்பு கின்ற ஒரு திறத்தவர், மத்தியஸ்தத்திற்கு பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கான அழைப்பு மற்றும் அத்தகைய அழைப்பின் பிரதி அனுப்பப்படுதல் வேண்டுமோ அம்மத்தியஸ்த சேவை வழங்குநரை மத்தியஸ்த சேவை வழங்கு நருக்கு பெயர்குறித்து நியமித்தலும்.

(2) உட்பிரிவு (1) இன் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மத்தியஸ்தத்திற் கான பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கு திறத்தவர் ஏனைய திறத்தவரை அல்லது திறத்தவர்களை அழைப்பு விடுத் திருப்பின், திறத்தவர் அழைப்பை அனுப்பிய தேதியி லிருந்து முப்பது (30) நாட்காலப்பகுதியினுள் அல்லது அழைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் அழைப்பின் ஏற்பினை பெறவில்லை எனின், அந்த அழைப்பினை அனுப்பிய திறத்தவர் அந்த அழைப்பை நிராகரிப்பதாக கருத்தில் கொள்ளலாம்.

(3) மேலே (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி திறத்தவர் ஒருவரினால் பிணக்கொன்றின் மத்தியஸ்தம் தொடங் கப்படுகின்றவிடத்து, மத்தியஸ்த சேவை வழங்குநர் அதற்கான அறிவித்தலைப் பெற்றுக்கொண்டதன்மேல், உடனடியாக மத்தியஸ்தர் ஒருவரை நியமிப்பதற்கும் மத்தியஸ்தத்தை தொடங்குவதற்கும் அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னெடுத்தல் வேண்டும்.

மத்தியஸ்தரின் நியமனம்

**9.** (1) மத்தியஸ்தம் ஒன்றை நடாத்தும் நோக்கத்திற்காக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மத்தியஸ்தர்கள் இருக்க வேண்டுமென திறத்தவர்கள் உடன்பட்டிருந்தாலன்றி மத்தியஸ்தர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

(2) திறத்தவர்கள் மத்தியஸ்தர் ஒருவரின் உடன்படிக்கையை அடைவதற்கு முயற்சித்தல் வேண்டும் என்பதுடன் திறத்தவர்கள் உடன்படுவதற்கு இயலாதவராக இருக்கும் பட்சத்தில், மத்தியஸ்த சேவை வழங்குநர் பிணக்கின் தன்மை, திறத்தவர்களின் முன்னுரிமைகள் மற்றும் நியமத்தவரின் தகைமைகள், பொருத்தமான தன்மை, கிடைப்பனவு என்பவற்றை கவனத்துட்கொண்டு ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மத்தியஸ்தர்களை நியமித்தல் வேண்டும்.

மத்தியஸ்தம் ஒன்றை தொடங்குதல்

**10.** பிணக்கொன்றின் மத்தியஸ்தம் ஆனது, மத்தியஸ்தரின் நியமனத் தேதியன்று தொடங்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

மத்தியஸ்தத்திற்கான நியாயமற்ற மறுப்புக்கான செலவுத் தொகைக்கான பொறுப்பு

**11.** நீதிமன்றம் ஒன்று ஒரு சிவில் அல்லது வர்த்தக பிணக்கு தொடர்பான ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஆகுசெலவுகளை வழங்குவதில் எவரேனும் திறத்தவர் மத்தியஸ்தத்தில் பங்குபற்றுவதற்கு நியாயமற்றமுறையில் மறுத்துள்ளாரா என்பதனை கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

மத்தியஸ்தம் ஒன்றிற்கான திறத்தவர்களின் கடப்பாடுகள்

**12.** மத்தியஸ்தம் மூலம் பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு நல்லெண்ணத்துடன் முயற்சிப்பது, இச்சட்டத்தில் தரப்பட்ட ஏற்பாடுகளுடன் இணங்குவதில் அந்தரங்கத்தன்மையைப் பேணுவது மற்றும் மத்தியஸ்தம் ஒன்றை நடாத்துவதற்கு ஏற்புடையற்பாலதான விதிகளுடன் இணங்குவது மத்தியஸ்தம் ஒன்றுக்கான திறத்தவர்களின் கடப்பாடுகளும் பொறுப்புமாதல் வேண்டும்.

திறத்தவர் ஒருவர் நேரடியாக மத்தியஸ்தத்தில் ஈடுபடுதல்

**13.** (1) பிணக்கொன்றிற்கான திறத்தவர் ஒருவர் மத்தியஸ்தத்தின் எல்லா நிலைகளின் போதும் நேரடியாக ஈடுபடுவதற்கு உரித்துடையவராகவும் தேவைப்படுபவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் வேறு எவரேனும் ஆளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதலாகாது.

(2) திறத்தவர் ஒருவர் சட்டத்தரணி உட்பட தீர்வொன்றை அடைவதற்கு திறத்தவருக்கு உதவக்கூடிய வேறு எவரேனும் ஆள் மூலம் மத்தியஸ்தத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு

தேர்வுசெய்யலாமென்பதுடன் அத்தகைய வேறு ஆள், அத்தகைய திறத்தவரின் வேண்டுகோளின்பேரில் மத்தியஸ்தர் மூலம் மத்தியஸ்த செயல்முறையை முகாமை மற்றும் கட்டுப்பாட்டிற்கு அமைய திறத்தவரின் சார்பாக கூற்றுக்களை செய்யலாம்.

(3) ஒரு கூட்டிணைக்கப்பட்ட அல்லது நியதிச்சட்ட குழு அல்லது சட்ட ஆளுமைகொண்ட வேறு உருவகம் அல்லது ஒரு அரசாங்க திணைக்களம் அல்லது வேறு நிறுவனமாக வுள்ள திறத்தவர் ஒருவர் தீர்வொன்றை எட்டுவதற்கு திறத்தவரின் சார்பில் பேசுவதற்கும் அத்துடன் தீர்வொன்றிற் கான உடன்பாட்டிற்கும் எழுத்தில் வழங்கப்பட்ட உரிய அதிகாரமட்டத்துடனான அலுவலரினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுதல் வேண்டும்.

மத்தியஸ்த சேவை வழங்குநர்களின் கடப்பாடுகள்

**14.** (1) மத்தியஸ்த சேவை வழங்குநர் ஒருவர் மத்தியஸ்தத்தை நடாத்துவதற்காக மத்தியஸ்தருக்கு நிருவாக ஆதரவை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நோக்கத்திற்காக பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்:-

(அ) மத்தியஸ்தர்களை நியமிப்பதற்கான நடவடிக் கைமுறை, அந்தரங்கத்தன்மை தொடர் பாகவும் மற்றும் பங்கமின்றியும் சட்டத்தை கடைப்பிடித்தல், திறத்தவரின் சுயாதீனக் கோட்பாட்டை கடைப்பிடித்தல், மத்தியஸ்த செயல்முறையின் ஒருமைப்பாடு, திறத்தவர் களின் மற்றும் மத்தியஸ்தரின் வகிபங்கு மற்றும் மத்தியஸ்த செயல்முறையினை நடாத்துதல் உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப் படாமல் மத்தியஸ்தங்களின் நடாத்துகைக்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய விதிகளை கடைப்பிடித்தல் ; அத்துடன்

(ஆ) மத்தியஸ்தர்களுக்கானஒழுக்கக்கோவையினைக் கடைப்பிடித்தல்; இது பிரிவு 15 இல் தரப்பட்ட தேவைப்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) முறையே, உட்பிரிவு (1) இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ளவாறாக விதிகள் மற்றும் ஒழுக்கக்கோவையை கடைப்பிடிக்காத மத்தியஸ்த சேவை வழங்குநர் ஒருவர் மத்தியஸ்த சேவைகளை நிர்வகிப்பதற்கான

விண்ணப்பங்கள் அல்லது கோரிக்கைகளை ஏற்றுக் கவனித்தலாகாது என்பதுடன் மத்தியஸ்த சேவைகளை நிர்வகித்தலும் ஆகாது.

மத்தியஸ்தர்களின் கடப்பாடுகள்

**15.** மத்தியஸ்தர் ஒருவர் எல்லா நேரங்களிலும் மத்தியஸ்த செயல்முறையின் ஒருமைப்பாடு பேணப்படுகின்றதென உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்காக மத்தியஸ்தங்களை நடாத்துவதில் பின்வருவனவற்றை கடைப்பிடித்தலும் வேண்டும்:-

(அ) மத்தியஸ்த செயல்முறை, மத்தியஸ்தரின் கட்டாயமல்லாத வகிபங்கு, மற்றும் திறத்தவர்களின் எதிர்பார்க்கப்படும் வகிபங்கு ஆகியவற்றை திறத்தவர்களுக்கு விளங்கப்படுத்துதல்;

(ஆ) பிணக்கிற்குரிய தீர்வு ஒன்றை அவர்கள்மீது திணிக்காமல் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான தகவலறிந்த மற்றும் தன்னார்வ தீர்வை எட்டுவதற்கென திறத்தவர்களுக்கு உதவுவதற்கென தோதானதென இருக்கக்கூடியவாறான அத்தகைய திறன்களையும் நுட்பங்களையும் பயன்படுத்துதல்;

(இ) மத்தியஸ்தத்தை சரியான நேரத்தில், நியாயமான முறையில், பாரபட்சமின்றி, நடு நிலைமையாக அத்துடன் செலவுதிறன் முறையில் நடாத்துதல்;

(ஈ) மத்தியஸ்தம்பற்றி எல்லா நேரங்களிலும் பிணக்குக்குரிய திறத்தவர்களின் நம்பிக்கையைப் பேணுதல்;

(உ) சூழ்நிலைகளில் தோதானதெனவிருக்கும் என கருதக்கூடியவாறான எல்லாத் திறத்தவர்களுடனும் கூட்டாகவும் அதே போன்று தனித் தனியாகவும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான பல மத்தியஸ்த மாநாடு களை நடாத்துதல்;

(ஊ) மத்தியஸ்தத்தின் போதும் மற்றும் அதன் பின்னரும் அக்கறை முரண்பாட்டை அல்லது அக்கறை முரண்பாடு தோன்றுவதை தவிர்க்கவும்

மற்றும் அந்நோக்கத்திற்காக சூழ்நிலைகள் உண்மையான அல்லது உணரப்பட்ட முரண் பாட்டின் தவிர்ப்பினை தடுத்திருப்பின், மத்தி யஸ்தத்திலிருந்து பின்வாங்குவதற்கு மறுத்தல் அல்லது முனைதல்;

(எ) மத்தியஸ்தர் ஒருவராக நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னராயினுஞ்சரி அல்லது மத்தியஸ்தத்தின்போது எந்த நேரத்திலா யினுஞ்சரி, அத்தகைய சூழ்நிலையை அறிந் தவுடன் உடனடியாக ஏதேனும் உண்மையான அல்லது உணரப்பட்ட அக்கறை முரண்பாட்டை திறத்தவர்களுக்கு வெளிப்படுத்துதல் அத்துடன் மத்தியஸ்தரின் வகிபங்கினை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது திறத்தவர்களின் எழுத்திலான சம்மதத்துடன் மட்டுமே வகிபங்கி னைத் தொடருதல்;

(ஏ) அத்தகைய தகவலானது அந்தரங்கமாக வைக்கப்படுதல் வேண்டும் எனவும் வேறு திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு வெளியிடப்படக்கூடாது எனவும் குறித்த நிபந்தனையின்மீது திறத்தவர் ஒருவரினால் வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் தகவல் உட்பட மத்தியஸ்த செயல்முறையின்போது பேணப்பட்ட குறிப்புகள் தொடர்பாகவும் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கி யொழுகும் வகையில் மத்தியஸ்தம் ஒன்றின் அந்தரங்கத்தன்மையினை பேணுதல்;

(ஐ) மத்தியஸ்தர்களுக்கு ஏற்புடையற்பதலதான நடத்தைக் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல்; அத்துடன்

(ஒ) திறத்தவர்களினால் உடன்பட்டுக் கொள்ளப் பட்டவாறான அத்தகைய நியதிகளுடன் இணங்கியொழுகுவதில் மத்தியஸ்தத்தை நடாத்துதல்.

மத்தியஸ்த வழக்கு நடவடிக்கைகளின் அந்தரங்கத் தன்மை

**16.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மத்தியஸ்தர், மத்தியஸ்தத்திற்கான திறத்தவர்கள் மற்றும் பிணக்கொன்றைத் தீர்த்துவைப்பதற்கான மத்தியஸ்தம் ஒன்றில் பங்குபற்றுகின்றவர்களான வேறு எல்லா ஆட்களும் பின்வருவன உட்பட மத்தியஸ்தத்தின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையை பேணுதல் வேண்டும்:-

(அ) திறத்தவர் ஒருவரினால் உருவாக்கப்பட்ட தீர்த்துவைத்தலுக்காக ஆக்கப்பட்ட கூற்றுக்கள், வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயங்கள், தெரிவுகள் மற்றும் முன்மொழிவுகள்;

(ஆ) எவரேனும் திறத்தவரினால் அல்லது எவரேனும் உயர்தொழிலரினால் முனையப்பட்ட பொருள் கோடல்கள்;

(இ) திறத்தவர் ஒருவரினால் மத்தியஸ்தத்தில் ஈடுபடுவதற்கான அழைப்பு ஒன்று அல்லது திறத்தவர் ஒருவர் மத்தியஸ்தத்தில் பங்கேற்பதற்கு தயாராக இருந்தனர் என்ற உண்மை;

(ஈ) தீர்த்துவைத்தலுக்காக செய்யப்பட்ட எவையேனும் முன்மொழிவுகளை திறத்தவர் ஒருவர் ஏற்றுக்கொள்வதற்கு விரும்பியிருந்தார் அல்லது ஏற்றுக்கொள்வதற்கு விரும்பியிருக்கவில்லை என்ற நிகழ்வு;

(உ) மத்தியஸ்தத்திற்காக முதன்மையாக தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்று.

(2) உட்பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கமைய, மத்தியஸ்தத்தின் போது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பாக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்றுக்கள் யாவும் பங்கமின்றி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தின்கீழ் அல்லது தீர்த்துவைத்தல் உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தும் அல்லது வலுவுறுத்தும் நோக்கங்களுக்காக வெளிப்படுத்துகை தேவைப்படுகின்றவிடத்து தவிர, ஏதேனும் சட்ட நீதிமன்றத்திலுள்ள சான்றில் அல்லது ஏதேனும் நடுத்தீர்ப்பில் அல்லது வேறு பிணக்கிற்கான தீர்வில் ஏல்தகவுடையதாதலாகாது என்பதுடன் அதற்கிணங்க மத்தியஸ்தம் ஒன்றிற்கான

திறத்தவர் எவரும் ஏதேனும் நீதிமன்றத்தில், நடுத்தீர்ப்பில் அல்லது ஏனைய செயல்முறையில் அத்தகைய ஏதேனும் விடயத்தை சான்றாக அறிமுகப்படுத்துவதற்கு நாடுதல் ஆகாது என்பதுடன் நீதிமன்றம், நடுத்தீர்ப்பு நியாயசபை அல்லது வேறு அதிகாரசபை அத்தகைய விடயங்கள்பற்றி கவனத்துட்கொள்ளுதல் ஆகாது.

(3) நடுத்தீர்ப்புசார், நீதிமுறைசார் அல்லது வேறு பிணக்கு தீர்வு வழக்குநடவடிக்கைகளில் வேறுவகையில் ஏல்தகவுடையதாக இருக்கின்றதான சான்று மத்தியஸ்தம் ஒன்றில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதான அல்லது வெளிப் படுத்தப்பட்டிருக்கின்றதான விளைவாந்தன்மை ஒன்றாக ஏல்தகவற்றதாக வருதல் ஆகாது.

(4) மத்தியஸ்தத்திற்கான திறத்தவர்கள், மத்தியஸ்த சேவை வழங்குநர் மற்றும் மத்தியஸ்தர் உட்பட ஆளெவரும் நேரிலோ அல்லது மெய்நிகராகவோ நடாத்தப்பட்ட மத்தியஸ்த வழக்குநடவடிக்கைகளின் ஒலி அல்லது ஒளிப்பதிவை செய்தல் ஆகாது.

மத்தியஸ்தம் ஒன்றை முடிவுறுத்தல்

**17.** மத்தியஸ்தம் ஒன்று பின்வருமாறு முடிவுறுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) திறத்தவர்கள் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றில் கையொப்பம் இடப்பட்டிருக்குமிடத்து; அல்லது

(ஆ) பின்வரும் சூழ்நிலைகள் எதிலும் தீர்வு ஒன்று இல்லாமல் மத்தியஸ்தம் முடிவுறுத் தப்பட்டிருக்கின்றதென மத்தியஸ்தர் வெளிப் படுத்துகை ஒன்றைச் செய்கின்றவிடத்த:-

(i) மத்தியஸ்தத்தின் முன்னேற்றத்தைக் கவனத்துட்கொண்டு மத்தியஸ்தத்தில் மேற்கொள்ளப்படும்மேலதிக முயற்சிகள் பயனற்றதாகவும் பிணக்கொன்றின் தீர்வொன்றில் சாத்தியமற்ற விளைவாக இருக்குமேயானால்;

(ii) திறத்தவர் மத்தியஸ்தத்திலிருந்து பின்வாங்குகின்றார் என எழுத்தில் திறத்தவர் ஒருவர் மத்தியஸ்தருக்கு அறிவிக்கின்றவிடத்து; அல்லது

(iii) மத்தியஸ்த வழக்குநடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு திறத்தவர்கள் விரும்புகிறார் என எல்லாத் திறத்தவர்களும் எழுத்தில் மத்தியஸ்தருக்கு அறிவிக்கின்றவிடத்து.

தீர்த்துவைத்தல் உடன்படிக்கை

**18.** (1) திறத்தவர்கள், தீர்த்துவைத்தல் நியதிகளின்மீது உடன்படிக்கையை தீர்மானிக்கின்றவிடத்து, மத்தியஸ்தர் தீர்த்துவைத்தல் நியதிகள் மற்றும் அதிலிருந்து எழுகின்ற கடப்பாடுகளை திறத்தவர்கள் தெளிவாக புரிந்துகொள்கிறார்கள் என திருப்திப்பட்டபின்னர், தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றில் எழுத்தில் தரப்படுகின்றனவான தீர்த்துவைத்தல் நியதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். இது திறத்தவர்களினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) திறத்தவர்களினால் அவ்வாறு கையொப்பமிடப்பட்ட தீர்த்துவைத்தல் உடன்படிக்கையானது, மத்தியஸ்தரால் அல்லது மத்தியஸ்தத்தின் விளைவொன்றாக அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கை எட்டப்பட்டதென்பதனை உறுதிப் படுத்துகின்ற மத்தியஸ்த சேவை வழங்குநரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் மூலப்பிரதிகள் திறத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.

தீர்த்துவைத்தல் உடன்படிக் கையின் பிணிக்கும் தன்மை

**19.** (1) தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்று அத்தகைய தீர்த்து வைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர்களுக்கு இடையில் பிணிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் செல்லுபடியாகும் ஒப்பந்தம் ஒன்றாக சட்டத்தில் வலுவுறுத்தப்படப் படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றின் நியதிகள் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர்கள் அல்லாத ஆட்களின் உரிமைகளைப் பாதித்தல் ஆகாது.

(2) தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றிற்கான திறத்தவர் ஒருவர் அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் நியதிகளின்படி தீர்த்துவைத்துள்ள விடயம் ஒன்று தொடர்பில் அத்தகைய உடன்படிக்கையின் வேறொரு திறத்தவருக்கு எதிராக நீதிமன்றம் ஒன்றில் சட்ட வழக்கு நடவடிக்கைகள்

தொடருகின்றவிடத்து, நீதிமன்றம் அத்தகைய விடயத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கம் எதனையும் கொண்டிருத்தலாகாது.

நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றின் ஏல்தகைமை

**20.** (1) ஏதேனும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கையில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள திறத்தவர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மத்தியஸ்தம் செய்யப்பட்ட தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றின் நியதிகளின்படி ஏற்கனவே தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாக உரிமை கோருகின்ற விடயம் சம்பந்தமாக பிணக்கொன்று எழுகின்றவிடத்து, அத்தகைய விடயம் ஏற்கனவே தீர்த்துவைக்கப்பட்டுள்ளது என நிலைநாட்டுவதற்கான சான்றொன்றாக அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்ற வழக்குநடவடிக்கையில் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றை சான்றாக ஏற்றுக்கொள்வதற்கு விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்து, அந்த விண்ணப்பம் அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றிற்காக திறத்தவர் ஒருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது 26 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தீர்த்துவைத்தல் உடன்படிக்கை தொடர்பில் நீதிமன்ற தீர்வை ஒன்றை வழங்க மறுக்கின்ற கட்டளை ஒன்றை மேல்நீதிமன்றம் செய்திருந்தாலொழிய, அத்தகைய வழக்குநடவடிக்கைகளில் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் செல்லுபடியாகும் தன்மை சவாலுக்கு உட்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(3) ஏதேனும் நீதிமன்ற வழக்குநடவடிக்கையில், தீர்த்து வைத்தல் உடன்படிக்கை ஒன்றை சான்றாக ஏற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்தும், அத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் அதனை ஏற்றுக் கொள்வதற்கு ஆட்சேபிக்கின்றவிடத்தும் நீதிமன்ற தீர்வை ஒன்றுக்கான விண்ணப்பம் ஒன்றில் திறத்தவரினால் 22 ஆம் பிரிவின்கீழ் செய்யப்படாதிருக்கின்றவிடத்தும், அல்லது அத்தகைய விண்ணப்பம் திறத்தவர் ஒருவரினால் செய்யப்பட்டிருப்பதன்மேல் நீதிமன்றக் கட்டளை முடிவுறாதிருக் கின்றவிடத்தும், நீதிமன்றம் விடயத்திற்கேற்ப-

(அ) அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள நாடுகின்ற திறத்தவர், நீதிமன்றத்தின் தீர்வை ஒன்றாக தீர்வையை பதிவுசெய்துகொள்வதற்கும் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும், 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கும் பணிக்கின்ற கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்;

(ஆ) மேல் நீதிமன்றத்தினால் கட்டளை ஆக்கப் படும்வரை வழக்குநடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல் வேண்டும்.

(4) எந்த திறத்தவருக்கு (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கட்டளை வழங்கப்பட்டிருக்கின்றதோ அந்த திறத்தவர், 22 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கால எல்லை எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கட்டளையை ஆக்கி முப்பது நாட்களினுள் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பம் ஒன்றை செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

*தீர்வற்றமை பற்றிய சான்றிதழ்*

**21.** (1) மத்தியஸ்தம் தீர்த்துவைத்தல் இன்றி முடிவுறுத் தப்படுகின்றதென மத்தியஸ்தர் வெளிப்படுத்துகின்ற விடத்து, மத்தியஸ்தர் கையொப்பமிட்டு ஒவ்வொரு திறத்தவர் களுக்கும் தீர்வற்றமை பற்றிய சான்றிதழை வழங்குதல் வேண்டும். அதில் பிணக்குபற்றிய சுருக்கமான விபரமும் மற்றும் சொல்லப்பட்ட பிணக்கு மத்தியஸ்தம்மூலம் தீர்த்து வைப்பதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது என்பதும் அத்துடன் தீர்த்துவைத்தல் எட்டப்படவில்லை என்பதும் பற்றிய கூற்றும் உள்ளடக்கப்பட்டிருத்தலும் வேண்டும் என்பதுடன் மத்தியஸ்தத்தில் சமுகமளிப்பதைத் தேவைப்படுத்தி அறிவிப்புகள் அனுப்பப்பட்டிருந்தபோதிலும் திறத்தவர் ஒருவர் சமுகமளிக்காமை காரணமாக மத்தியஸ்தம் ஆனது முன்னெடுக்கவியலாதிருப்பின், அனுப்பப்பட்ட அறிவித்தல் களுக்கு விபரங்களையும் அத்தகைய திறத்தவர் சமுகமளிக்காமை பற்றிய தேதிகளையும் குறிப்பிட்டு அதன்கண் அத்தகைய நிகழ்வை குறிப்பிடுதல் வேண்டும்.

(2) தீர்வற்றமை பற்றிய சான்றிதழ் ஒன்று அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்கு மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப் படுத்தப்பட்டது எனவும் அதன் தீர்த்துவைத்தல் சாத்தியமாக இருக்கவில்லை எனவும் நிலைநாட்டுவதற்கு இறுதியானதும் முடிவானதுமாக சான்றில் ஏல்தகவுடையதாகவிருத்தல் வேண்டும்.

தீர்த்துவைத்தலை நீதிமன்றத் தீர்வை ஒன்றாக பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்

**22.** (1) தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றிற்கான திறத்தவர் ஒருவர் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் தீர்த்துவைத்தலை நீதிமன்றத்தின் தீர்வை ஒன்றாக பதிவுசெய்துகொள்வதற்கு மேல்நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றை செய்யலாம்.

(2) தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றிற்கான திறத்தவர் ஒருவருக்கு ஏலவே உள்ளதும் அல்லது அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின்படி எழக்கூடியதுமான கிடைக்கப்பெறப்படற்பாலதான ஏதேனும் உரிமை அல்லது நிவாரணம் என்பன (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய திறத்தவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மூலம் அல்லது அத்தகைய விண்ணப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்ற நிகழ்வின்மூலமும் பாதிக்கப்படுதலோ, வரையறுக்கப்படுதலோ அல்லது மட்டுப்படுத்தப்படுதலோ ஆகாது.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

**23.** பிரிவு 20 இன் நோக்கங்களுக்காக தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றை அனுமதிப்பதற்கு நாடுகின்ற அல்லது 22 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்றைச்செய்கின்ற திறத்தவர் ஒருவர் விடயத்திற்கேற்ப, மேல் நீதிமன்றத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்திற்கு அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கை மத்தியஸ்தத்தின் விளைவொன்றாக எட்டப் பட்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்ற திறத்த வர்களினால் கையொப்பமிடப்பட்டும் மற்றும் மத்தியஸ்த்தரால் அல்லது மத்தியஸ்த சேவை வழங்குநரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோக்கத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டும் தீர்த்து வைத்தல் உடன்படிக்கையின் மூல அல்லது உரிய முறையினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேல்நீதி மன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கைகள்

**24.** (1) பிரிவு 22 இன்கீழ் மேல் நீதிமன்றத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் மனு என்றவகையாகவும், சத்தியக் கடதாசி என்ற வகையாகவும் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் மனுதாரர் அல்லது மனுதாரர்கள் தவிர வேறு தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர்களும் எல்லாத் அத்தகைய மனுவிற்கான பிரதிவாதிகளாகப் பெயரிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு அந்த மனுவின் அறிவித்தல் வழங்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மத்தியஸ்தர் ஒருவர் அல்லது தீர்த்துவைத்தல் உடன்படிக்கையில் அத்தாட்சிப்படுத்தியுள்ள மத்தியஸ்த சேவை வழங்குநரின் எவரேனும் உத்தியோகத்தர் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவராக கவனத்துட்கொள்ளப்படுதலாகாது என்பதுடன் பிரதிவாதி களாக பெயரிடப்படுதலாகாது.

(2) மனுவும் சத்தியக்கடதாசியும் சமர்ப்பிக்கப்படுகின்ற தன்மேல், மேல்நீதிமன்றம் அத்தகைய சமர்ப்பிப்பின் இரண்டு கிழமைகளினுள் பிரதிவாதிகளுக்கு அவர்களது ஆட்சேபனைகள் எவையேனும் இருப்பின், அவற்றை எழுத்தில் சத்தியக்கடதாசியினால் ஆதரிக்கவும் அதனது பிரதிகளை மனுதாரருக்கு கிடைக்கச் செய்யவும் ஒரு தேதியை வழங்குதல் வேண்டும் என்பதுடன் மனுவில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தீர்மானிப்பதற்காக பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட அத்தகைய தேதியை இரண்டு கிழமைகளினுள் ஒரு நாளை நியமித்தலும் வேண்டும்.

(3) மேல்நீதிமன்றத்தின் முன்னதான வழக்குநடவடிக்கைகளில் சத்தியக்கடதாசி என்றவகையாக சான்று வழங்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும் மேல்நீதிமன்றம் அது தகுதி யானதெனக் கருதுகின்றவிடத்து, சத்தியக் கடதாசிமூலம் வழங்கப்பட்ட சான்றிற்கு மேலதிகமாக நேர்முக சான்றை எடுத்துக்கொள்ளலாம்.

மத்தியஸ்தர் அல்லது உத்தியோகத்தர் கையொப்பமிடுவதற்கான சாட்சி ஒன்றாக அழைக்கப்படுதலாகாது

**25.** தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்றில் அல்லது நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட தீர்வற்றமை பற்றிய சான்றிதழ் ஒன்றில் இடப்படும் மத்தியஸ்தர் ஒருவரின் அல்லது மத்தியஸ்த சேவை வழங்குநரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம் உண்மையானது என்று நீதிமன்றம் ஊகிக்கலாம் என்பதுடன் அது அத்தகைய ஆளை அதன் எண்பிப்பிலுள்ள சாட்சி ஒன்றாக அழைத்தலாகாது.

நீதிமன்ற தீர்வை ஒன்றை மறுப்பதற்கான ஏதுக்கள்

**26.** (1) பிரிவு 22 இன் நியதிகளின்படி திறத்தவர் ஒருவரினால் எந்த மேல்நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்படுகின்றதோ அந்த மேல்நீதிமன்றம்,-

(அ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் சில இயலாமையின்கீழ் இருந்தார் எனவும்;

(ஆ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கையானது அதனது நியதிகளுக்கு இணங்க இறுதியானதல்ல எனவும்;

(இ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் கடப்பாடுகள்-

(i) முறையாக நிறைவேற்றப்பட்டு இருந்துள்ளது என்றும்; அல்லது

(ii) தெளிவாகவோ அல்லது புரிந்து கொள்ளக் கூடியதாகவோ இருக்கவில்லை எனவும்;

(ஈ) மத்தியஸ்தருக்கு அல்லது மத்தியஸ்தத்திற்கு ஏற்புடையற்பாலதான நியமங்களை மத்தியஸ்தர் கடுமையாக மீறியிருந்தார் எனவும்; அந்த மீறுகை இல்லாமல் திறத்தவர் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையில் செய்திருக்கமாட்டார்கள் எனவும்; அல்லது

(உ) மத்தியஸ்தர் பிரிவு 15(2)(எ) இல் தரப்பட்டுள்ளதான அக்கறை முரண்பாடு ஒன்றின் வெளிப்படுத்துகை பற்றிய கடமையுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ளார் எனவும் வெளிப்படுத்துகைக்கான தவறுகை உடனடி பாதிப்பை அல்லது அந்த திறத்தவர்மீது முறையற்ற செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது எனவும்;தவறுகை அத்திறத்தவர் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையை செய்திருக்கமாட்டார் எனவும்,

அது அவ் உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரினால் நிலைநாட்டப்பட்டிருப்பின், அத்தீர்த்துவைத்தல் உடன்படிக்கை தொடர்பில் நீதிமன்ற தீர்வை ஒன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

(2) நீதிமன்றம் பின்வருவனவற்றைக் கண்டுபிடிப்பின், தீர்வை ஒன்றை வழங்குவதற்கும் மறுக்கலாம்-

(அ) தீர்வை ஒன்றினை வழங்குவது இலங்கையின் பொதுக் கொள்கைக்கு முரணானதாக இருக்கும்; அல்லது

(ஆ) பிணக்கின் விடயப்பொருள் இலங்கைச் சட்டங்களின்கீழ் மத்தியஸ்தம்மூலம் தீர்த்து வைக்க இயலாதாகும்.

நீதிமன்றத் தீர்வை ஒன்றினைப் பதிவுசெய்தல்

**27.** (1) பிரிவு 22 இன் நியதிகளின்படி விண்ணப்பம் செய்யப்பட்டு, வேண்டப்பட்ட தீர்வையை வழங்க மறுப்பதற்கான ஏதுக்கள் எதுவும் நிறுவப்படாதிருக்கின்றவிடத்து, நீதிமன்றம் திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்க வேண்டிய நாளன்று சொல்லப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க தீர்ப்பொன்றை பதிவுசெய்வதற்கு முன்னெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் தீர்வையொன்று பதிவு செய்யப்படுதலும் வேண்டும்.

(2) தீர்த்துவைத்தல் உடன்படிக்கை ஒன்று மேல்நீதிமன்றத்தின் தீர்வையாக பதிவுசெய்யப்பட்டு இருந்துள்ளவிடத்து, அது (101 ஆம் அத்தியாய மான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட தீர்வை ஒன்றாக அதே முறையில் வலுவுறுத்தப்படலாமென்பதுடன் தீர்வைகளின் நிறைவேற்றம் தொடர்பாக குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய வலுவுறுத்துகைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

**28.** (1) இரண்டாயிரமாம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

நீக்கங்களும் பேணல்களும்

(2) இரண்டாயிரமாம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய சட்டத்தின் நீக்கம் எது எவ் வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாயுள்ள இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் அரசிற்கு உரித்தாதல் வேண்டும்.

**29.** இச்சட்டத்தில்-

பொருள்கோடல்

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154ரு என்னும் உறுப்புரையினால் மாகாணத்திற்காக தாபிக்கப்பட்டதும் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாண மேல் நீதிமன்றங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் குடியியல் நியாயாதிக்கத்தினை பிரயோகிக்கின்றது மான இயைபான மேல் நீதிமன்றம் எனப் பொருள்படும்;

"எழுத்துமூலம்" என்பது, அதன்கண் அடங்கியுள்ள தகவல்கள் அடுத்துறும் தொடர்புகுறிக்கு அணுக்கமாகவுள்ளவிடத்து, இலத்திரனியல் தொடர்பாடல் உள்ளடங்கலாக ஏதேனும் வடிவத்திலும் ஏதேனும் உள்ளடக்கத்தை பதிவுசெய்தல் எனப் பொருள்படும்;

"மத்தியஸ்தம்" என்பது, பயன்படுத்தப்படும் சொல்லமைப்பு அல்லது எந்த அடிப்படை யில் செயல்முறை கொண்டு செல்லப்பட வேண்டுமோ அந்த அடிப்படையைப் பொருட்படுத்தாமல், பிணக் கிற்கான தீர்வு ஒன்றை திறத்தவர்கள் மீது விதிப்பதற்கு அதிகாரம் இல்லாத மூன்றாம் திறத்த நடுநிலை ஆளின் அல்லது ஆட்களின்

("மத்தியஸ்தர்") உதவியுடன் தமது பிணக்கிற்கான இணக்கமான தீர்வை எட்ட முயற்சிக்கும் திறத்தவர்களினாலான செயல்முறையொன்று எனப் பொருள்படும்;

"மத்தியஸ்த சேவை வழங்குநர்" என்பது, மத்தியஸ்தங்களை நிருவகிப்பதற்கான சேவைகளை வழங்கும் ஒரு ஆள் அல்லது உருவகம் எனப் பொருள்படும்;

"மத்தியஸ்தர்" என்பது, மத்தியஸ்தம் மூலம் பிணக்கொன்றைத் தீர்த்துவைப்பதில் உதவுவதற்கு நியமிக்கப்பட்ட மூன்றாம் திறத்த நடுநிலை ஆள் எனப் பொருள்படும் என்பதுடன் தனி ஒரு மத்தியஸ்தர் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மத்தியஸ்தர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**30.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை

[பிரிவு 3]

1. திருமணக் குலைவு ஒன்றை நாடுகின்ற பிணக்குகள்.

2. திருமணத்தின் வெற்றான தன்மையின் வெளிப்படுத்துகை ஒன்றை நாடுகின்ற பிணக்குகள்.

3. ஆட்கள் மற்றும் சித்த சுவாதீனமற்ற ஆட்களின் மரணசாதனச் சொத்து பராயமடையாதோர் மற்றும் இளங்களர் தொடர்பான பிணக்குகள்.

4. பாதுகாவலர்கள், காப்பாளர்கள் மற்றும் பெறுநர்கள் என்போர் தொடர்பான பிணக்குகள்.

5. பிள்ளைகளின் மகவேற்பு தொடர்பான வழக்குகள்.

6. பிறப்புகள் மற்றும் இறப்புகளை பதிவுசெய்தல் தொடர்பான வழக்குகள்.

7. பலர்தொடர்புபடுகின்ற உரிமைகளைப் பெற்றுக்கொள் வதற்கான அசையாத ஆதனத்தின் பிரிவிடல் ஒன்றை நாடுகின்ற பிணக்குகள்.

8. மரணசாதனப் பத்திரங்களையும் நிருவாகப் பத்திரங்களையும் வழங்குவது தொடர்பான பிணக்குகள்.

9. கடனிறுக்கவகையின்மைக் கட்டளைச்சட்டத்தின்கீழ் நிவாரணத்தை நாடுகின்ற பிணக்குகள்.

10. பலர்தொடர்புபடுகின்ற உரிமைகள் தொடர்பான கடலாண்மை விடயங்கள் தொடர்பான பிணக்குகள்.

11. நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையினாலான அடிப்படை உரிமைகளின் மீறுகை ஒன்றை சார்த்துகின்ற பிணக்குகள் .